ஸ்ரீ ஹரி:

ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அருளாசியுடன்

# மதுரமுரளி

**தெய்வீக மாதப் பத்திரிகை**

வேணு : 12 ஜூலை 2007 கானம் : 12

## பொருளடக்கம்

பக்கம்


1. ஸ்ரீ ஸ்வாமிஜியின் கீர்த்தனம் ... 2
2. மதுரமான மஹனீயர் - 138 ... 3
3. பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜியின் பதில்கள் ... 7
4. மாதம் ஒரு புத்தகம் ... 9
5. ஸ்ரீமத் பாகவதம் சொல்லும் கருவின் வளர்ச்சி ... 11
6. ஸ்ரீ சங்கரர் நூல்களில் ரஸானுபவங்கள்-22 .... 15
7. பாலகர்களுக்கு ஒரு கதை-110 ... 17
8. பிருந்தாவனமும் நந்தகுமாரனும் ... 19
9. ஸ்ரீ ஸ்வாமிஜியின் ஸம்பாஷணைகளிலிருந்து-136 ... 22
10. செய்திகள் ... 25


**ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே**
**ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே**

ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ ஸ்வாமிஜியின் கீர்த்தனம்

**ராகம் : தெம்மாங்கு** **தாளம் : ஆதி**

**பல்லவி**

*குறுக்கு வழிதேடும் மாந்தர்களே! எதற்கும்*
*(இந்த) குற்றாலக் குறத்தி குறி சொல்வேனைய்யா!*

*(குறுக்கு)*

**சரணங்கள்**

1. *காசு பணம் செலவழித்து நீ காத தூரம் போக வேண்டாம்!*
*குருநாதன் பாததீர்த்தம் கங்கையாம் புனித யமுனையாம்!*

*(குறுக்கு)*

2. *பாபத்திற்குப் பரிகாரம் என்று அங்குமிங்கும் அலைய வேண்டாம்!*
*குருநாதன் பார்வை பட்ட பின்பு பாபம் என்றும் ஒன்றுள்ளதா?*

*(குறுக்கு)*

3. *பக்தி வளர என்ன வழி? என்று பரிதவிக்க வேண்டாமே!*
*குருநாதன் அமுது செய்ததை உண்டால் பக்தி தானே வளருமே!*

*(குறுக்கு)*

4. *முக்தி அடைய என்ன வழி? என்று முட்டி மோத வேண்டாமே!*
*குருநாதன் திருவடி தூளியில் அந்த முக்தி இருக்குதைய்யா!*

*(குறுக்கு)*

5. *நான்கையும் கைகொள்வீரானால் உங்கள் பார்வை உள்ளே திரும்பிடுமே!*
*உள்ளே உள்ளே போக எல்லையில்லா ஆனந்தமே!*

*(குறுக்கு)*

6. *நல்ல பலனும் சொல்லிவிட்டேன் எனக்குக் காசும் பணமும் வேண்டாமே!*
*குருநாதரிடம் என் பொருட்டும் ஒரு வார்த்தை சொல்லிடுவீரைய்யா!*

*(குறுக்கு)*

அண்மையில், சென்னையில், ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள், சத்ஸங்க அன்பர்களிடையே, சத்ஸங்கத்தின் குறிக்கோள், சத்சங்கத்தில் பழகும் முறை, தவறாமல் கடைப்பிடிக்கவேண்டிய விதிமுறைகள் போன்றவற்றையெல்லாம் பற்றி எடுத்துரைத்தார்கள். ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் எடுத்துரைத்தவற்றை அனைவரும் அறிந்து பயனடைய வேண்டும் என்ற நோக்கத்துடன் இங்கு பகிர்ந்து கொள்கின்றோம்.

1. சத்ஸங்கம் என்பது ஒரு பொழுதுபோக்கு அல்ல. பார்க், பீச் போல், பொழுதுபோக்குவதற்கும், பலரைப்பார்த்துப் பேசுவதற்கும் ஆன ஒரு இடமாகி விடக்கூடாது.

2. கல்யாணம் அல்லது ஒரு பொது நிகழ்ச்சி போன்று அது ஒரு கூட்டமும் அல்ல.

3. சத்ஸங்கத்தில் இருப்பதால், பலர், அசுத்தமாக இருப்பதுதான் தெய்வீகத்தின் அடையாளம் என்றும், எந்த ஒரு ஒழுங்கிற்கும் கட்டுப்படாமல் நடந்துகொள்வதுதான் தெய்வீகம் என்றும் தனக்குத் தானே கற்பனை செய்துகொண்டு அதன்படி நடப்பதும் தவறு.

4. நேரம் தவறாமையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

5. சுத்தமாக இருக்கவேண்டும். எளிமையாகவும் இருக்க வேண்டும்.

6. சத்ஸங்கத்தில், முதன்முதலாக கலந்துகொண்டபொழுதும், குருநாதரை முதன்முதலாகப் பார்த்தபொழுதும், எந்த ஒரு ஆர்வமும் உற்சாகமும் இருந்ததோ, அது, ஒரு எள் அளவும் குறையக் கூடாதது மட்டுமல்ல; நாளுக்கு நாள் வளரவும் வேண்டும்.

7. ஆண்கள், பெண்கள் சரளமாக கலந்து பழகுதல் கூடாது.

8. அருமையான மனிதப்பிறவியும், சத்ஸங்கமும் கிடைத்தும், தேவையில்லாத பிரச்சனையில் தலையிட்டு அதிலிருந்து எப்படி வெளிவருவது என்பதே வாழ்க்கை முழுவதும் சிந்தனையாகி அந்தப் பிரச்சனையை நினைத்தே வாழ்க்கை கழியுமானால் எவ்வளவு பரிதாபம்?

9. சத்ஸங்கத்தில் இருக்கும் நேரம் நாம் சாதனை புரியும் நேரம். நாம் தியானம் செய்யும்பொழுது எவ்வளவு ஒருமுகப்பட்ட சிந்தனையுடன் இருப்பதற்கு ஆசைப்படுவோமோ, அதுபோல், சத்ஸங்கத்தில் இருக்கும்பொழுதும் ஒருமுகப்பட்ட சிந்தனையுடன் இருக்க வேண்டும்.

10. சத்ஸங்கத்தில் கதை நடந்தால் எல்லோரும் Sincereஆக கேட்க வேண்டும். அப்படி முடியாது என்றால் நமஸ்காரம் செய்து விட்டு சென்று விடலாம்.

11. அதுபோல், நாமசங்கீர்த்தனம் நடந்தால் எல்லோரும் கலந்து கொள்ள வேண்டும். ஒருவர் பாடுவது, ஆடுவது, மற்றொருவர் வேடிக்கைப் பார்ப்பது என்று இருக்ககூடாது.

12. வெளியூர் Transfer, வெளியூர் வேலை என்று சென்றாலும் எப்பொழுதும் நாமகீர்த்தனத்துடன் இருக்க வேண்டும்.

13. எல்லாமுடிந்த வழிகளிலும், பாடசாலை, மற்றும் நாம பிரச்சாரம், இவைகளை latest technology வசதிகளை பயன்படுத்தி, ஆடம்பரம் இல்லாமல் organisedஆக நடத்த வேண்டும்.

14. பிடிவாத உணர்வுகளை மதிக்காமல், அதற்கு இடம் தராமல் நியாயமான உணர்வுகளையே மதித்து நடக்க வேண்டும்.

15. பணம் செலவழிப்பதில் எவ்வளவு கருத்தும் அக்கறையும் உள்ளதோ, அதுபோலவே, நேரத்தை கணக்கிட்டு செலவிடுவதில் அதிக அக்கறையும் கவனமும் வேண்டும். பணமாவது செலவழிந்தால், சம்பாதித்துக் கொள்ளலாம், நேரம் திரும்பி வருவது இல்லை.

16. உலகம் முழுவதும் மஹாமந்திர கீர்த்தனை கேட்கும் வரை ஓயக்கூடாது.

17. எதிர்ப்புகள், புறம் கூறுதல், தவறான பிரச்சாரம், பொய் பிரச்சாரம், மொட்டை கடிதம், தவறான செய்தி இவைகளை எதிர்கொள்ள நேர்ந்தால், ''உலகம் என்றால் இப்படித்தான் இருக்கும். எல்லோருடைய வாழ்க்கையிலும் இது நிகழக்கூடிய ஒன்றுதான்'' என்று விவேகத்துடன் தள்ளிவிட வேண்டும்.

18. நாம் பேசுவதற்கும், நடந்து கொள்வதற்கும் உள்ள இடைவெளி குறைவாகவே இருக்க வேண்டும்.

19. தவறுகளை மூடி மறைப்பதை விட, அது தவிர்க்க முடியாத மனித இயல்புகளில் ஒன்று என்று பிறர் புரிந்துகொள்ள செய்வதே சரியான அணுகுமுறை ஆகும்.

20. ஒரு ஊரை நோக்கிச் செல்பவன், தவறான பாதையில் செல்வானானால், சிறிது நேரத்தில் தன் தவறை உணர்ந்து சரியான பாதைக்கு வந்துவிடுவதுபோல் அவ்வப்பொழுது நம்மை சரி செய்துகொள்ள வேண்டும்.

21. வாசனைகளைப் பிரார்த்தனையினால்தான் வெல்ல முடியும்.

22. விடாமல் நாமகீர்த்தனம் செய்து வருவதே பிரார்த்தனையாகும்.

23. ரயில்வண்டி தண்டவாளத்தின் மீது ஓடுவதுபோல் மஹாமந்திர கீர்த்தனையின் பலத்தில்தான் வாழ்க்கை ஓட வேண்டும்.

24. சில தெய்வீக வழிகளைப் பின்பற்றுபவர்களையும் அதைப்பற்றி பேசுபவர்களைப் பார்த்தும், அது சரியோ, என்று குழப்பம் அடையாமல், உண்மையான, சுலபமான, எல்லோராலும் பின்பற்றக்கூடிய, பகவானுக்கு மிகவும் பிடித்தமான, கீர்த்தனத்தையே பின்பற்ற வேண்டும்.

25. எதிர்மறையாக பேசக்கூடாது, சுயபச்சாதாபம் கூடாது. வாழ்க்கையை வெறுத்துப் பேசக்கூடாது, எப்பொழுதும் எதையோ பறிகொடுத்தாற்போல் இருக்கக் கூடாது.

26. எப்பொழுதும், கம்பீரத்துடன், தன்னம்பிக்கையுடனும் முகம் மலர்ந்து இருக்க வேண்டும்.

27. எல்லோரும் அமர்ந்துகொள்வது, பழகுவது உட்பட அனைத்தும் ஒரு ஒழுங்கில் இருக்க வேண்டும். ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள், மற்றும் மஹான்கள் உபந்யாசத்தில் சொல்வதை, ஒரு கச்சேரி கேட்டுவிட்டு செல்வதைப்போல் செல்லாமல், அவற்றில் சிலவற்றையாவது வாழ்க்கையில் கடைப்பிடிக்க முயற்சிக்க வேண்டும்.

28. யாருக்கு எந்த மஹாத்மாவிடம் மனது ஈடுபடுகின்றதோ, அங்கு சென்று அவரிடம் பக்தியாகவும், ஈடுபாட்டுடன் இருக்க வேண்டும்.

29. யாரையும் தாக்கியோ, புண்படுத்தியோ பேசக்கூடாது. முடிந்த வரை உதவிகள் செய்யலாமே தவிர, கடன், வியாபாரம் இவற்றை ஸத்ஸங்க அன்பர்களுடன் வைத்துக்கொள்ள கூடாது.

30. இவைகள் எல்லாம் யாருக்கு பொருந்துகின்றதோ அவர்களே சத்ஸங்கத்தின் அன்பர்கள் ஆவார்கள்.

(தொடரும்)

**- டாக்டர் ஆ. பாக்யநாதன்**

---

***Sri Hari :***

***Pranams to the Lotus feet of***
**H.H. SRI SRI MURALIDHARA SWAMIJI**

**M/s. BUDDIES INFOTECH PRIVATE LIMITED**

***Web Designing and Application Development***

**Old No. 22, New No. 34, Sriman Srinivasa Road,**
**Alwarpet, Chennai - 600 018.**
**Phone No. 044-421 44 662**
**e-mail : contact buddiesinfotech.com**

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜியின் பதில்கள்

*கேள்வி : தெய்வத்திற்கும் கோபம் வருவது உண்டா?*

பதில் : ஆம். தெய்வத்திற்கும் கோபம் வருவது உண்டு.

*கேள்வி : மனிதர்களுக்கு கோபம் வந்தால், அவர்களுடைய முகத்தைக் கொண்டும், செய்கைகளைக்கொண்டும் தெரிந்துகொள்ளலாம். தெய்வத்தின் கோபத்தை எப்படி தெரிந்துகொள்வது?*

பதில் : இயற்கைச் சீற்றங்கள், பஞ்சம், வெள்ளம், பூகம்பம், தீ விபத்துகள் போன்றவைகள் வழியாக தெய்வத்தின் கோபத்தை நாம் அறிந்துகொள்ள முடியும்.

*கேள்வி : தெய்வத்திற்கு ஏன் கோபம் வருகின்றது?*

பதில் : மக்களிடம் அதர்மம் தலைதூக்கும்பொழுது.

*கேள்வி : தெய்வத்தை எப்படி சாந்தபடுத்துவது?*

பதில் : மஹாமந்திர கீர்த்தனத்தால் சாந்தப்படுத்தலாம்.

*கேள்வி : வேறு மந்திரம் சொல்லலாமா? இதைத்தான் சொல்ல வேண்டுமா ?*

பதில் : வேறு எந்த உபநிடதத்தின் பெயரும் கலி என்ற யுகத்தின் பெயரை சொல்லப்படவில்லை. ஆனால், இந்த மஹாமந்திரத்தின் பெருமையைச் சொல்லக்கூடிய உபநிடதத்திற்கே கலிஸந்தரண உபநிஷத் என்று பெயர் இருப்பதால் இந்த மந்திரம் ஒன்றே கலியுகத்திற்கு ஜபம் செய்ய தகுந்தது என்பது ஆயிற்று.

*கேள்வி : ஒரே ஒரு தரம் சொன்னாலும் முக்தி என்றால் ஏன் எப்பொழுதும் சொல்ல வேண்டும்?*

பதில் : ஒரு அலுவலகத்தில் ஒருவர் வேலை பார்க்கின்றார். அவருக்கு பல லட்சங்களில் ஊதியம். முதலாளியோ எதையும் கவனிக்கவோ கண்டுகொள்ளவோ மாட்டார். அப்படியிருந்தும் மனசாட்சி உள்ளவன், நாம் வாங்கும் ஊதியத்திற்கு உண்மையாக

உழைக்க வேண்டும் என்று நினைப்பான். மனசாட்சி இல்லாதவனோ அவர்தான் ஒன்றும் கேட்கப் போவதில்லையே, எப்படி இருந்தால் என்ன? என்று நினைப்பான்.

அதுபோல், பகவான் கருணையால் அவனை நினைத்த மாத்திரத்தில், அவன் பெயரைச் சொன்ன மாத்திரத்தில் முக்தி தருவான் என்றாலும்கூட அவனுடைய கருணையைத் திருடாமல் நமக்கு எவ்வளவோ உபகாரம் செய்த அவனை முடிந்த பொழுதெல்லாம் கீர்த்தனம் செய்துகொண்டிருக்க வேண்டும். அதுதான், உண்மை பக்தனுடைய நிலை.

---

ஸ்ரீ ஹரி:

## ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸ பெருமாள் சந்நதி

மஹாரண்யம் கிராமம், மலைப்பட்டு B.O. படப்பை. P.O. 601 301.
ஸ்ரீ பெரும்புதூர். T.K. காஞ்சி மாவட்டம்

ஸகல மங்களங்களையும் அருளும் வரப்ரஸாதியான மஹாரண்யம் ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸ பெருமாள் சந்நதியில் பக்தர்களின் பிரார்த்தனைகள், ஒவ்வொரு சனிக்கிழமையன்றும் காலையில் பெருமாளிடம் விண்ணப்பிக்கப்படுகின்றன.

பக்தர்கள், தங்களது பிரார்த்தனைகளை தபால் தலை ஒட்டிய உறைமீது ''பிரார்த்தனைப் பெட்டி'' என்று குறிப்பிட்டு அனுப்பினால், பிரசாதம் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

பிரார்த்தனைப் பெட்டியில் கண்டிப்பாகக் காணிக்கைகள் எதுவும் செலுத்தக்கூடாது. பிரார்த்தனைகள் மட்டுமே பிரார்த்தனைப் பெட்டியில் ஏற்றுக்கொள்ளப்படும்.

-ராதே க்ருஷ்ணா-

---

மனது, பிறரைப் பார்த்து, 'வாழ்க்கை அநித்யமானது, உலகம் பொய்யானது, உடல் பொய்யானது' என்று எல்லாம் உபதேசம் செய்யும். ஆனால், இவற்றை எல்லாம் மனம் தனக்குத் தானே அல்லவா சொல்லிக்கொள்ள வேண்டும்!

**- ஸ்ரீ ஸ்வாமிஜி**

# மாதம் ஒரு புத்தகம்

இறை தரிசனத்தை நாடும் ஒவ்வொரு ஆன்ம சாதகனும் தவறாது படித்து, பின்பற்ற வேண்டிய ஒரு அற்புதமான நூல் "AUTOBIOGRAPHY OF SWAMI SIVANANDA" என்ற DIVINE LIFE SOCIETY வெளியீடாகும். ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள், தமது அருளுரைகளில், 'நமது வேத, சாஸ்திரங்களில் எவ்வளவோ உயர்ந்த விஷயங்கள் சொல்லப்பட்டாலும், அவற்றை அளவிற்குட்பட்ட நமது புத்தியினால் அறிவதென்பது இயலாத ஒன்று. அந்த உயர்ந்த விஷயங்களெல்லாம் ஏதோ ஏட்டுச் சுவடிகளில் எழுதிவைக்கப் பட்டவையாக இருந்துவிடாமல், அவற்றை தமது வாழ்நாளில் நிரூபிக்கும் வண்ணம் மஹாபுருஷர்கள் தோன்றுவார்கள்' என்று சொல்வதுண்டு.

அவ்வாறு, இந்த பூவுலகில் அவதரித்து, ஆன்மீகத்தின் உச்சநிலைக்கு நமக்கு வழிகாட்டியவர் ஸ்வாமி ஸ்ரீ சிவானந்தா அவர்கள். எவ்விதமான ஒளிவு-மறைவின்றி, மிகவும் எளிமையாகவும், ஆன்ம சாதகர்களை ஊக்குவிக்கும் வகையிலும் அமைந்துள்ளது ஸ்ரீ சிவானந்தரின் சுயசரிதை.

அந்த அரிய நூலின் துவக்கத்தில் அவர் எழுதியுள்ள "How God came into my life" என்ற கட்டுரை மிக மிக சுவாரஸ்யமானது.

அதில், ஸ்வாமி ஸ்ரீ சிவானந்தர், ‘‘கடவுள் என் முன் எப்படி தோன்றி, என் வாழ்வை ஆட்கொண்டார்? என்ற கேள்விக்கு நான் சுலபமாக, 'நான் ஸ்வர்காஸ்ரமத்தில் நெடுங்காலம் இயற்றிய கடுந்தவத்தினாலும், பல மஹரிஷிகளின் அனுக்ரஹத்தினாலும், பகவான், ஸ்ரீ க்ருஷ்ணராக என்முன் தோன்றினார்' என்று விடையளித்துவிடலாம். அப்படி விடையளித்தால் அது முற்றிலும் உண்மையாக இருக்காது. மேலும், மனதிற்கும், வாக்கிற்கும் அப்பாற்பட்டவரும், எங்கும் நிறைந்தவரும், எதற்குள்ளும் அடங்காதவருமான அந்த பரம்பொருள் சம்பந்தமான கேள்விக்கு ஏற்ற விடையாகாது.

ஞான அனுபவம் என்பது தற்செயலாக ஏற்பட்டுவிடும் ஒரு விஷயமன்று. அது சிகரத்தின் உச்சியைப் போன்றது. மேலே செல்லும் பாதை, முட்கள் நிறைந்தது. கீழே வழுக்கிவிடக்கூடிய பல படிகள் நிறைந்தது. நான் அந்த படிகளை ஒவ்வொன்றாக மிகவும் சிரமப்பட்டு ஏறினேன். ஆனால், ஒவ்வொரு நிலையிலும் கடவுள் என் வாழ்வில் புகுந்து, அடுத்த நிலைக்கு எளிதாக என்னை உயர்த்தியதை உணர்ந்தேன்!'' என்று குறிப்பிட்டுள்ளது அனைவருக்கும் ஒரு படிப்பினையாகும்.

**- டாக்டர் ஆ. பாக்யநாதன்**

---

நம் மதம் எல்லாவிதங்களிலும் முழுமையான ஒன்று என்று ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் அடிக்கடி கூறுவார்கள். நம் மதத்தின் ஆணி வேராக இருக்கும் வேதத்தில் சொல்லப்படாத விஷயங்களே இல்லை என்று சொல்லிவிடலாம்.

பிறவியின் நோக்கமான ஞானத்தை அடைவதற்கான வழிகளை சொல்வதோடு மட்டுமல்லாமல், நாம் உலகில் வாழும் காலம் வரை (நோய் நொடி இல்லாமல்) நல்ல ஆரோக்யத்துடனும் நீடுழி வாழ்வதற்கான பல உபாயங்களையும் நமது சாத்திரங்கள் சொல்கின்றன. அவற்றுள் சுலபமானது ஒன்று தினமும் பஞ்ச கவ்யத்தையும் நெல்லிக்காயையும் உட்கொள்வதாகும் என்று ஆயுர்வேதம் சொல்கின்றது.

பஞ்சகவ்யம் என்பது பசுவின் சாணம், கோமியம், பசு நெய், பசும்பால், பசுந்தயிர் இவற்றின் கலவையாகும்.

''இவற்றை தினமும் உட்கொள்வதனால் ஒருவனுக்கு நோய் எதிர்க்கும் சக்தி அதிகரிக்கின்றது. உடல் ஆரோக்யம் திடப்படுகின்றது. புற்றுநோய் போன்ற கொடிய வியாதிகள் வராமல் தடுக்கின்றது. மனத்தூய்மை ஏற்படுகின்றது'' என்றெல்லாம் நமது சாத்திரங்கள் சொல்கின்றன.

ராம நாம மயமாகவே வாழ்ந்த திருவண்ணாமலை பகவன் யோகிராம்சுரத்குமார் அவர்களும், "Nellikkai for the body! Ram Nam for the soul!" என்று சொல்வதுண்டு.

# ஸ்ரீமத் பாகவதம் சொல்லும் கருவின் வளர்ச்சி

நமது மதநூல்களான வேதங்களிலும், புராண, இதிகாசங்களிலும் சொல்லப்படாத விஷயம் ஒன்று இல்லவே இல்லை. இனிமேலும் அப்படி ஒன்று இராது என்பதே அதன் தனித்துவம். இதை, பல மஹான்களும் பன்முறை உறுதியாக கூறி உள்ளனர். ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள், இதை பலவிதமாக எழுதியும், அருளுரைகளில் வலியுறுத்தியும் வருகின்றார்கள்.

'அவற்றில், மெய்ஞ்ஞான விஷயமாகட்டும், விஞ்ஞான விஷயமாகட்டும், மறைமுகமாகவோ, கதைகள் மூலமாகவோ அல்லது சில சமயங்களில் நேரிடையாகவும் சொல்லப்பட்டு உள்ளது' அதை நாம் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும்'' என்று ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் வலியுறுத்துவார்கள். சந்திர சூரிய கிரகணங்களைப் பற்றி, எந்தவித கருவியுமின்றி, அவை எந்த கணத்தில் நிகழும் என்பதை நமது வானியல் சாஸ்திரம் கூறுகின்றது. இன்று 'Path finder' ஐ அனுப்பி செவ்வாய் கிரகத்தைப் படம் பிடித்துள்ளனர். அவற்றில் செவ்வாய் சிகப்பு நிறமோ காட்சியளிக்கிறது. இந்த உண்மையை என்றோ நமது ஜோதிட சாஸ்திரம் சொல்லிவிட்டது. செவ்வாய்க்கு ப்ரீதி வரவேண்டுமெனில், 'சிகப்பு' வண்ணத் துணியையும், புஷ்பங்களையும் அர்ப்பணிக்கிறோம். $H_2O$ என்று வேதியலில் நீரை குறிப்பிடுகின்றனர். இரண்டு பகுதி ஹைட்ரஜனும் ஒரு பகுதி ஆக்ஸிஜனுமாக இருப்பதை இப்படி குறிப்பிடுகின்றனர். நமது வேதமோ, ***''ப்ராணன் ஏகம் அன்ய த்வே''*** (அதாவது, ''ப்ராண வாயு ஒரு பகுதியும், மற்றது இரண்டு பகுதியும்'') என்று அதையே சொல்கிறது. பூமி கோள வடிவமானது என்பதை 'பூகோளம்' என அருஞ்சொல்லால் இயல்பாகவே நாம் குறிப்பிடுகிறோம்.

அணுவிற்கும் நுட்பமான பொருளுண்டு (Sub--atomic particles) என்பதை, ''அணுவிற்கு அணுவாய்'' என ஔவையார் பாடி உள்ளார். ஆக, நமது புராணங்கள், இதிஹாஸங்கள், வேதங்கள் சொல்லாத விஷயமே இல்லை. நவீன விஞ்ஞானம் மேலும், மேலும் வளர, நமது சனாதன மதத்தில் சொல்லப்பட்டவை உறுதிப்படுத்தப்பட்டு வருகின்றன.

மேற்கண்ட விஷயங்களை எல்லாம் நம் ஸ்வாமிஜி அவர்கள் பாமரருக்கும் புரியும்படி சொல்வதுண்டு. நமது மதத்தின் தனிச் சிறப்பை நாம் அவசியம் தெரிந்துகொள்ள வேண்டும் அல்லவா?

ஸ்ரீமத் பாகவதத்தில், கபில வாஸுதேவரின் சரித்திரம் விஸ்தாரமாக சொல்லப்பட்டுள்ளது. இவர், விஷ்ணு பகவானின் அவதாரம். சாங்க்யம் எனும் கொள்கைக்கு மூலமானவர். இவரது தந்தை கர்த்தம பிரஜாபதி, தாய் தேவஹூதி. இவரது தாய்க்கும் இவருக்கும் இடையில் ஒரு உரையாடல் வருகிறது. இதில் கருவிலுள்ள ஜீவனின் வளர்ச்சிக் குறித்து தெளிவாகச் சொல்லப் படுகிறது.

கருவுற்ற நாள் முதல் பிரசவக்காலம் வரையிலான சிசுவின் வளர்ச்சி விவரங்கள் வரிசையாக சொல்லப்பட்டுள்ளது. இதில் என்ன ஆச்சரியம் என்றால், எவ்வளவோ ஆயிரம் வருடங்களுக்கு முன்பு எழுதப்பட்ட ஸ்ரீமத் பாகவதத்தில் வரும் இவ்விஷயம், இன்றைய நவீன மருத்துவ ஆய்வுகளின்படி உள்ள விவரங்களை முழுக்க முழுக்க ஒத்துள்ளதே ஆகும்.

இன்று, 'அல்ட்ரா சவுண்ட்' (Ultra Sound) போன்ற நவீனமான ஆய்வு முறைகள் மூலம் எதை கண்டுபிடித்து உள்ளனரோ, அதை என்றோ, ஒருவித கருவியுமின்றி ஸ்ரீ கபிலர் தெளிவாக எடுத்துரைக்கின்றார். ஒரு ஆணின் இந்திரிய சக்தியானது, பெண்ணின் கருமுட்டையுடன் ஓரிரவில் இணைந்து, 5 இரவுகளில் ஒரு சிறிய குமிழ் வடிவம் பெறுவதாக ஸ்ரீமத் பாகவதம் கூறுகிறது. பத்து நாட்களில் அது கடினமாகிறது என்றும், மேலும் பந்து வடிவம் பெறுவதாகவும் கூறுகிறது.

*கலலம் த்வேகராத்ரேண பஞ்சராத்ரேண புத்புதம் ।*
*தசாஹேன து கர்கந்தூ: பேச்யண்டம் வா தத: பரம் ॥* *(3:31:2)*

நவீன விஞ்ஞானம் சொல்வது, இதை, அப்படியே ஒத்து உள்ளது. பெண்ணின் ஓவரியிலிருந்து (Ovary) தோன்றும் பெண் முட்டையானது ஃபெலோப்பியன்டியூபில் (FALLOPIANTUBES) ஆணின் விந்தணுக்களுடன் சேர்ந்து 'ZYGOTE' உருவாகின்றது என தற்கால மருத்துவம் சொல்கிறது. அந்த வடிவில், செல்கள்

பன்மடங்காகப் பிரிந்து, 'MORULA' எனும் வடிவம் பெறுகிறது. இரண்டாவது வாரத்தில் BLASTOCYST எனும் பந்து வடிவம் ஏற்பட்டு கருப்பைச் சுவற்றில் ஒட்டிக் கொள்கின்றது.

ஸ்ரீமத் பாகவத்தில், மேலும் ஒரு மாதத்தில், தலை உண்டாகிறது எனவும், இரு மாதங்களில் கை, கால் வளர்கிறது என்றும் கூறுகிறது. மூன்றாவது மாத முடிவில், கை, கால் விரல் நகங்கள் வருவதாகவும், உடம்பிலுள்ள ரோமம் தோன்றுவதாகவும், எலும்பும், தோலும் அமைகிறது எனவும் கூறுகிறது. மேலும், இதே சமயத்தில் பிறப்புறுப்புகளும், மனித உடலில் உள்ள அனைத்து துவார அமைப்புகளும் வருவதாக கூறுகிறது ஸ்ரீமத் பாகவதம். மனித உடலுக்குத் தேவையான ஏழு பொருட்கள் (இரத்தம், தசை, கொழுப்பு, எலும்பு முதலான ஏழு பொருள்கள்) 4 மாதங்களில் வருகின்றது எனவும், 5 மாதத்தில் பசி, தாகம் ஏற்படுகிறது எனவும் சொல்கிறது.

*சதுர்பிர் தாதவ: ஸப்த பஞ்சபி: க்ஷுத் த்ருடுத்பவ: ।*
*ஷட்பிர் ஜராயுணா வீத: குக்ஷௌ ப்ராம்யதி தக்ஷிணே ॥ (3:31:4)*

மூன்றாவது வாரத்திலிருந்து தலைப்பாகம் வளர ஆரம்பிக்கிறது என நவீன மருத்துவம் கூறுகின்றது. 5லிருந்து 8 வாரங்களில் கை, கால் மொட்டு (Limb buds) போன்ற வளர்ச்சியும் அதன் அமைப்பும் வருகிறது என்கிறது. 7வது வார ஆரம்பத்திலிருந்து பிறப்புறுப்பின் வளர்ச்சியும், 14வது வாரத்தில் முழு அமைப்பும் பெறுவதாகவும் கூறுகிறது. 12வது வாரத்தில் முடி, நகம் வருவதாகவும் 18வது வாரத்தில் சிசுவால் விழுங்க முடியும் என்பதும் நவீன மருத்துவ முடிவுகள். இந்த முடிவுகள் ஸ்ரீமத் பாகவதத்தை ஒட்டியே உள்ளதைப் பார்க்கிறோம்.

மேற்கொண்டு சிசுவின் வளர்ச்சியைப் பற்றி ஸ்ரீமத் பாகவதம் பின்வருமாறு கூறுகிறது. 6 மாதங்களில் சிசுவை சுற்றி ஒரு Membrane போன்ற அமைப்பு உருவாகி, அது தாயின் வயிற்றில் நகர ஆரம்பிக்கிறது. தாயிடமிருந்தே ஊட்டச்சத்தை எடுத்துக்கொள்ளும் சிசு, மலமும், சிறுநீரும் கலந்த ஒரு பையில்தான் வளர்கிறது. அங்கு, பல சிறிய கிருமிகளால் தாக்கப்பட்டு சொல்லொணாத வேதனையை

அனுபவிக்கிறது. 7வது மாதத்திலிருந்து அதற்கு நினைவாற்றல் ஏற்பட்டாலும் பிறந்தவுடன் இந்த வேதனையை மறந்துவிடுகின்றது. வயிற்றில் ஏற்படும் காற்றின் விசைகளால் ஒருவிதமாய் அங்குமிங்கும் தள்ளப்படும் சிசு, பத்தாவது மாதத்தில் தலைகீழாக வாயுவினால் உந்தப்பட்டு, மூச்சின்றி, மிகுந்த வேதனையுடன் பிறக்கிறது.

*ஏவம் க்ருதமதிர்கர்பே தச மாஸ்ய: ஸ்துவந்ருஷி: ।*
*ஸத்ய: க்ஷிபத்யவாசீனம் ப்ரஸூத்யை ஸூதிமாருத: ॥ (3:31:22)*

அல்ட்ரா சவுண்ட் (Ultra Sound) முடிவுகளின்படி, 28வது வாரத்தில் கண்கள் திறக்கின்றன. கேட்கும் சக்தியும், நரம்பு மண்டலமும் அமையப் பெறுகிறது என தெரிகிறது. 7வது மாதத்தில் கருவிற்கு நினைவாற்றல் வருகிறது என ஸ்ரீமத் பாகவதம் தெரிவிப்பதை இது உறுதிப்படுத்துகிறது. Amniotic fluid என நவீன மருத்துவம் கூறுவது ஸ்ரீமத் பாகவதம் கூறும் மலமும், சிறுநீரும் கலந்த ஒரு திரவம்தான். இது கலந்த ஒரு பையில்தான் சிசு வளர்கிறது என ஸ்கேன் முடிவுகளும் சொல்கிறது. பெரும்பாலும் தலைகீழான நிலை வரும்வரை சிசு நகர்ந்துகொண்டே இருக்கிறது. பிரசவ வேதனையுடன் பின்னர் குழந்தை பிறக்கிறது.

இப்படி, கருவின் வளர்ச்சி மற்றும் பிரசவம் குறித்து மிகவும் நுணுக்கமாக ஸ்ரீமத் பாகவதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பது படிப்பவரை வியப்பில் ஆழ்த்துவது உறுதி! மற்றொரு கோணத்தில் பார்த்தால், நமது மனதிற்கும், புத்திக்கும் அப்பாற்பட்ட அந்த இறையனுபவத்தைப் பற்றியே எடுத்துரைக்கும் ஸ்ரீமத் பாகவதம், இந்த விஷயத்தைப் பற்றி இவ்வளவு துல்லியமாக விளக்குவதில் வியப்பேதும் இல்லை அல்லவா?

**– டாக்டர் ஆ. பாக்யநாதன்**

---

தெய்வீக செயல்பாடாக இருந்தாலும், உலகியல் செயல்பாடாக இருந்தாலும், அந்த வேலையைச் செய்ய ஆரம்பிப்பதற்கு முன், அதைப் பற்றிய மேன்மைகளையும், பெருமைகளையும் ஆக்க பூர்வமாக சிந்தித்து அதை நேசிக்க கற்றுக்கொண்டு, பிறகு செய்ய ஆரம்பித்தால், அந்த செயலே ஆனந்தமாக அமையும்.

**- ஸ்ரீ ஸ்வாமிஜி**

# ஸ்ரீ சங்கரர் நூல்களில் ரஸானுபவங்கள்-22

- குடந்தை என். ராமசர்மா

மஹதாச்ரயத்திற்குத் தடையாயிருப்பது உலகாயத விஷயங்களின் மீதுள்ள பற்று. இதுவே, சம்சார பந்தம். இது தலைகீழ் விருட்சமாக இருக்கிறது. இதுவே, ஞானமார்க்கத்தை மறைத்துக்கொண்டு நிற்கிறது. இதை வெட்டி எறிந்தால்தான், ஞானமார்க்கப் பயணம் செய்ய வேண்டிய பாதைப் புலப்படும். இந்த மரமோ முதலும் முடிவுமில்லாமல் செழித்து, ஓங்கி நிற்கும் வடிவமுடையது போலிருக்கிறது. நெருங்கினால், கானல் நீர் போல் மறைந்து விடுகிறது.

*'நரூபமஸ்யேஹ ததோபலப்யதே*
*நாந்தோ நசாதிர் நசஸம்ப்ரதிஷ்டா!*
*அச்வத்தமே நம் ஸுவிரூடமூலம்*
*அஸங்க சஸ்த்ரேணத்ருடேந சித்வா!! (ப.கீ.15-3)*

இந்த அச்வத்த விருட்சத்தை (அரச மரத்தை) வைராக்கிய மெனும் உறுதியான கோடரிகொண்டு நன்றாக வெட்டிய பிறகே, எதனிடம் சென்றவர்கள் மீண்டும் திரும்பி வருவதில்லையோ அந்நிலையைத் தேட வேண்டும் என்கிறான் கண்ணன். *தத: பதம் தத் பரிமார்க்கிதவ்யம் யஸ்மிந்கதா ந நிவர்த்தந்தி பூய:!!*

மாதவன் மனதைச் சாதகன் உணரச் செய்யும் ஞான ஆதவனின் கானக்குயிலோசை கேளுங்களேன்!

அதுசரி. சம்ஸார விருட்சத்தைப் பரமன் ஏன் அச்வத்த விருக்ஷம் (அரசமரம்) என்கிறான்? ஆச்சாரியர் கூறுவார்.' *நச்வோऽபிஸ்த்தாத: இதி அச்வத்த: தம்க்ஷண ப்ரத்வம்ஸிநம் அச்வத்தம் -* நாளைக்குக் கூட இல்லாதது. கணப்பொழுதிற்குள் அழியும் தன்மை யுடையது; அதாவது நொடிக்கு, நொடி மாறும் இயல்புடையது. எனவே, ஸம்ஸார பந்தத்தை அச்வத்த விருட்சமாகக் கண்ணன் உருவகப்படுத்துகிறான் என்று சொல்லும் ரஸம் நயமல்லவா!

தலைகீழாக இருக்கிறது; மாறிக்கொண்டே இருக்கிறது; நெருங்கினால் மறைந்துவிடுகிறது. இந்த மரத்தை எப்படித்தான் வெட்டுவதாம்? அது என்ன வைராக்யமெனும் கோடரி. இல்லாத மரத்தை உறுதியாக வெட்டுவது எவ்வாறு? மேற்கூறிய மூன்று இலக்கணங்கள் கொண்ட ஸம்ஸார விருட்சத்தை மூன்று இலக்கணங்கள் கொண்ட வைராக்யத்தால் தான் அழிக்க முடியுமாம்!

*அஸங்க சஸ்த்ரேண-அஸங்க:-புத்ரவித்தலோகைஷணாதிப்யோ வ்யுத்தானம் - தேந* - மகன், பணம், உலகாயத விஷயங்கள் இவற்றின் பாலுள்ள பற்றுகளிலிருந்து விடுபடுதல் வைராக்யமெனும் கோடரியின் முதல் இலக்கணம். இதுவே இரும்புக் கோடரி.

*பரமாத்மாபிமுக நிஸ்சய த்ருடீக்ருதேந-* என்று பரமாத்ம சிந்தனையையே ஒரே குறியாகக் கொண்டு இயங்கும் உறுதி. இது இரண்டாவது இலக்கணம். இதுவே மரக் கைப்பிடி.

*புந: புந: விவேகாப்யாஸாச்ம நிசிதேந,* பகுத்தறியும் விவேக அறிவெனும் சாணைக்கல்லில் திரும்பத்திரும்ப அடிக்கடி தீட்டப் பட்டு, கூராக்கப்பட்ட வைராக்யமெனும் கோடரி. இது மூன்றாவது இலக்கணம். இதுவே, கூராக்கப்பட்டு வெட்டுவதற்கு தயார்ப் படுத்துதல். அஸங்க சாஸ்த்ரத்தின் பிரஸங்கரஸம் தனி ரஸம்.

... வளரும்

---

மஹாத்மாக்கள் கங்கை நதியைப் போன்றவர்கள். வெயிலில் அலைந்து திரிந்து வருபவனுக்கு கங்கையில் நீராடுவது சுகத்தைக் கொடுக்கும். குளிரில் நடுங்குபவனுக்கு அதன் சுகம் தெரியாது. அதுபோல், உலக வாழ்க்கையில் துக்கத்தால் வாடுபவர்களுக்கே, மஹான்களின் திருவடியின் அருமையும் சுகமும் தெரியும். கங்கையில் நீராடுதல் புண்யம் தருவதுபோல் மஹான்களின் சங்கமும் புண்ணியம் தரும். ஆனால், கங்கையில் ஆழம் தெரியாமல் விளையாடினால் உள்ளே இழுத்துவிடும், அதுபோல், மஹான்களிடம் சாமான்ய மனிதர்களுடன் விளையாடுவதுபோல் விளையாடினால் விபரீதம் விளையும்.

**– ஸ்ரீ ஸ்வாமிஜி**

# பாலகர்களுக்கு ஒரு கதை - 110

ஒரு மன்னன், தன் நாட்டை நீதி தவறாமல், தர்மம் தவறாமல் ஆட்சி செய்து வந்தான். அந்த நாட்டில், மக்கள் அனைவரும் அதிகாலையில் எழுந்து நீராடி விட்டு, அவரவர்களுக்கு உரிய சமயக் குறிகளை நெற்றியில் இட்டுக்கொண்டு கோயிலுக்குச் செல்வார்கள், இறைவனை வழிபடுவார்கள், அந்த நாட்டில் மது கடைகளே கிடையாது. யாரும் புகை பிடிப்பதில்லை, யாரும் வட்டிக்கு பணம் விட்டு சம்பாதிப்பதில்லை. எல்லோரும் ஒழுக்கமாக சம்பாதித்து வாழ்ந்து வந்தார்கள். இதனால், அந்த நாட்டு மன்னன், தன் நாட்டில் மக்கள் அனைவரும், மிகவும் ஒழுக்கமாக, தீய பழக்கங்கள் இல்லாமல் இருக்கின்றார்கள் என்று மார்தட்டிக்கொண்டான்.

ஒரு சமயம், அந்த நாட்டில் மழை பொய்த்துவிட்டது, எங்கும் பஞ்சம் நிலவியது. இதனால், மன்னன் வருத்தம் அடைந்தான். ''என் நாட்டு மக்கள் எவ்வளவு நீதி தவறாமல் ஒழுக்கமாக இருக்கிறார்கள், இப்படி இருக்கும் நாட்டில் மழை பெய்யாமல் இருப்பது என்ன நியாயம்?'' என்று தனக்குள்ளே கேள்வி எழுப்பினான். பஞ்சத்தை போக்க வழிகள் பலவற்றை கையாண்டுப் பார்த்தான். ஆனால், எதுவும் அளிக்கவில்லை.

அப்பொழுது, அந்த நாட்டின் பக்கத்தில் உள்ள காட்டில் மஹாத்மா ஒருவர் வந்து தவம் புரிகின்றார் என்ற செய்தி மன்னன் காதில் விழுந்தது. அந்த மஹாத்மாவிடம் சென்றால் ஒரு வழி பிறக்கும் என்று நினைத்து அவரை சந்திக்க காட்டிற்குச் சென்றான். அவரை சந்தித்து, ''ஸ்வாமி! எங்கள் நாட்டில் சில மாதங்களாக ஒரே பஞ்சம், மழை பெய்யாமல் மக்கள் அனைவரும் பஞ்சத்தினால் அவதிபடுகிறார்கள். மதங்கள் சொன்ன வழியில் ஒழுக்கமாக வாழ்ந்த என் நாட்டு மக்களுக்கு ஏன் இந்த நிலை?'' என்று மஹாத்மாவிடம் கேள்வி எழுப்பினான், மன்னன்.

மழை பெய்யாமல் இருந்ததற்கு காரணம் என்ன என்பதை மன்னனுக்கு புரியவைக்க நினைத்தார் மஹாத்மா. பின்பு அந்த மஹாத்மா, மன்னனிடம், ''உங்கள் நாட்டில் ஒரு ஆலயம்

இருக்கின்றதே, அந்த ஆலயத்திற்கு அனைவரின் வீடுகளில் இருந்து ஒரு சொம்பு பால் எடுத்து வந்து அபிஷேகம் செய்ய வேண்டும். ஓர் இரவில் அதை ஒரு துவாரம் வழியாக அவர்கள் ஊற்றிவிட்டு செல்ல வேண்டும். இதை சேர்க்க பின்புறம் ஒரு பெரிய அண்டா போன்ற பாத்திரம் வைக்க வேண்டும். அது இருப்பது அவர்களுக்கு தெரியாத வகையில் இந்த செயல் நடைபெற வேண்டும். பின் பாத்திரத்தில் உள்ள பால் அனைத்தையும் எடுத்துச் சென்று, அந்த ஆலயத்தில் அபிஷேகம் செய்தால் இந்த பஞ்சம் தீரும்'' என்று மஹாத்மா சொல்லி முடித்தார்.

இதன் விளைவாக, மன்னன், மக்கள் அனைவரும் ஒரு சொம்பு பால் எடுத்து வந்து செலுத்த வேண்டும் என்ற செய்தியை அறிவித்தான். அனைவரும் ஒரு சொம்பு பாலை எடுத்துச் சென்று துவாரத்தில் செலுத்தாமல், 'நாம் ஒரு சொம்பு பால் செலுத்தாமல் போனால் மற்றவர்களுக்கு தெரியப் போகிறதா என்ன?' என்று நினைத்து வெறும் சொம்பை எடுத்துச் சென்றனர். ஒருவர் கூட பாலை செலுத்தவில்லை.

மறுநாள், காலையில் அந்த கோயிலில் பூஜை செய்யும் அர்ச்சகர், பால் சேகரிப்பதற்காக வைத்திருந்த பெரிய பாத்திரத்தை திறந்து பார்த்தால் அதில் துளி பாலும் இல்லை. இதை மன்னனிடம் தெரிவித்தார். மன்னன், உடனே மஹாத்மாவை சந்தித்து ''ஸ்வாமி! அபசாரம் நேர்ந்துவிட்டது. பால் வைப்பதற்காக வைத்திருந்த பாத்திரத்தில் துளி கூட பால் இல்லை'' என்று தெரிவித்தான்.

உடனே, மஹாத்மா மன்னனிடம், ''நீ உன் நாட்டு மக்கள் அனைவரும் ஒழுக்கமாக இருப்பதாக கூறினாய், சரிதான். இருப்பினும், அவர்கள் நல்லவர்களாக இல்லையே! அப்படி நல்லவர்களாக இருந்தால் இறைவன் உங்கள் நாட்டில் மழை பெய்ய செய்திருப்பானே! புறச் சின்னங்கள், ஒழுக்கமாக இருந்தாலும் நாம் அனைவரும் ஆத்ம பரிசோதனை செய்து நல்லவர்களாக இருக்கின்றோமா என்பதை பார்க்கவேண்டும். மனித நேயம் இல்லாமல் இருக்கக் கூடாது என்பதை மக்கள் அனைவரும் உணர்ந்து செயல்பட வேண்டும்'' என்று மன்னனிடம் அறிவுரை கூறினார் அந்த மஹாத்மா.

# பிருந்தாவனமும் நந்தகுமாரனும்

*(சென்ற இதழ் தொடர்ச்சி)*

நித்யானந்ததாஸ் பாபாஜி, தனது ஸித்திகளை வெளிப்படுத்தாத போதிலும், அவரது புகழ் வெகுவாக பரவிற்று. ஒரு முறை, அம்ருதசரஸில் உள்ள ஒரு பக்தரின் கனவில், அவர் உபாசனை செய்து வந்த ராதா-ஷ்யாம்சுந்தர் யுகளம் தோன்றி, 'எங்களை நந்தக்கிராமத்தின் ஸித்தநித்யானந்ததாஸரிடம் அழைத்துச்செல். அவருடைய பூஜையை ஏற்க நாங்கள் ஆர்வமாய் உள்ளோம்!' என்று கூறினர். அந்த பக்தரும் அவ்வாறே செய்தார். விக்ரஹ உபாசனையைப் பக்தி மார்க்கத்தில் உயர்ந்ததாகவே பாபா கருதினாலும், நாம சங்கீர்த்தனமே அதைக்காட்டிலும் உயர்ந்ததாக எண்ணினார்!

தன்னைப் போன்ற சந்யாசிகள் விக்ரஹ ஆராதனை செய்ய வேண்டும் என்றால் அதற்கு நிறைய பொருள் சேர்க்கும் படியாகிவிடும். அது சந்யாச தர்மத்திற்கு விருத்தமாகிவிடும். ஆனால், இப்பொழுது இந்த யுகளம் தாங்களே தேடி வந்திருந்தனர். இருந்தபோதிலும், பாபா இவர்களுக்காக விசேஷமாக எதுவும் செய்ய முற்படவில்லை. ஒரு குடீரம் அமைத்து, அதில் அவர்களை ஸ்தாபித்து, தன்னுடைய ஒரு சிஷ்யனையே பூஜைக்கும் நியமித்தார்.

மதுகரியில் கிடைக்கும் உணவையே அவர்களுக்கும் அளித்தார்! யாராவது ஒரு சிஷ்யர் அவர்களுக்கு ஏதாவது விசேஷமான உணவை தயார் செய்ய எண்ணினால், பாபா அவர்களிடம், ''நம்மிடம் அவர்கள் இதையெல்லாம் எதிர்ப்பார்க்க முடியாது. நம் உணவைதான் அவர்களும் உண்ண வேண்டும்!'' என்று கூறிவிடுவார்.

மஹாமந்திரத்தில் சித்தியடைந்த பின், பாபா 'ஹரி பக்தி ப்ரசாரிம் ஸபா' என்று மதுரா நகரில் மையமாக ஒரு குழுவை அமைத்தார். இந்த ஸபையின் மூலம் அவர் தீவிரமாக நாமப்ரசாரம் செய்தார். ஹதாரா, அலிகர், ஜெய்பூர், டெல்லி, அம்ருதஸரஸ், பிருந்தாவனம், ஜகன்னாதபுரி போன்ற பல இடங்களில் பாபா அகண்டமாக நாமஸங்கீர்த்தனம் செய்தார். எல்லா இடங்களிலும்

அகண்டநாமம் ஒரு மாதத்திற்கோ, இரண்டு மாதங்களுக்கோ அல்லது ஒரு வருடமோ நடைபெறும். நாமஸங்கீர்த்தனமே முக்கியமான பக்திஸாதனம் என்று அவர் வலியுறுத்துவார். ஹரி நாம கீர்த்தனம் மட்டுமில்லை, ஹரிநாம சிரவணம், லேகனம், ஹரி நாமத்தைப் பார்ப்பது என்று எல்லாமே ஒருவனை பவித்ரமாக்கும் என்று அவர் கூறுவார்.

'முதலில் நாமத்தில் நிஷ்டை ஏற்படும்வரை, ஒரு கணக்கு வைத்துக் கொண்டு நாமகீர்த்தனம் செய்ய வேண்டும். இதுவே, நாமத்திற்கு நம்மை சரணடையச் செய்துவிடும். 'நாமம் இல்லாமல் நானில்லை' என்ற நிலை ஏற்பட்டு நாமத்தையே சரணடைந்தால், பகவான் நம் முன்பு தோன்றியே தீருவான்!' என்று கூறுவார் பாபா.

அஷ்டயாமலீலா ஸ்மரணத்தைக் காட்டிலும் நாம சங்கீர்த்தனம் உயர்ந்தது என அவர் வலியுறுத்துவார். 'நாமமே கல்பதரு! இந்த மரத்திற்கு கீர்த்தனம், நாமஜபம் எனும் தண்ணீரை ஊற்றிக் கொண்டே வந்தால், அது முளைத்து கிருஷ்ண-லீலை எனும் இலைகள் கொண்ட பெரிய மரமாக வரும். 'நாமத்தை ஆச்ரயித்தவர்கள் அடைய முடியாதது என்று ஒன்றுமே இல்லை' என அவர் நாம மகிமையை எடுத்துரைப்பார்.

நாமகீர்த்தனம் போன்றே, சாது சேவையையும் பாபா மிக உயர்ந்ததாகக் கூறுவார். நாம யக்ஞம் நடக்கும் பொழுதெல்லாம் சாது போஜனமும் (அன்னதானமும்) பெரிய அளவில் நடைபெறும். ஒவ்வொரு ஊருக்கும் பாபா வெறும் கையுடனே வருவார். ஆனால், எப்படியோ நாம யக்ஞம் நடக்கும்பொழுது எங்கிருந்தோ எல்லா பொருட்களும் வந்து சேர்ந்துவிடும். சாது சேவை விமர்சையாக நடைபெறும்.

ஹதாரஸ் மற்றும் அலிகர் இரண்டு ஊர்களிலும் ஒரு வருடகாலம் தொடர்ந்து அகண்ட நாம பஜனை செய்தார் நித்யானந்தபாபா. மாலை வேளைகளில் பிரவசனமும் நடைபெறும். பகலில் பெண்களும் இரவில் ஆண்களும் இந்த நாமயக்ஞங்களில் பங்கேற்பர். ஆயிரக்கணக்கில் மக்கள் இந்த யக்ஞத்தினால் பயனடைந்தனர்.

இந்த நாம யக்ஞங்களின்போது பாபா தொடர்ந்து எட்டு மணி நேரம் ஒரே இடத்தில் அமர்ந்து நாமகீர்த்தனம் செய்வார்.

பாகவத-சப்தாஹம் போலவே நாம சப்தாஹம் எனும் சம்பிரதாயத்தை ஒரிஸா போன்ற மாநிலங்களில் பாபாதான் அறிமுகப்படுத்தினார்.

பாபா ஒருபொழுதும் தன்னுடைய ஸித்திகளை பிரயோகப் படுத்தவேமாட்டார். ஹதாரஸில் ஒரு முறை அகண்டநாமம் நடந்து கொண்டிருந்தபோது, ஒருவர், மரண தருவாயிலிருக்கும் தன் ஒரே மகனை அழைத்து வந்து, பாபாவிடம் எப்படியாவது காப்பாற்ற வேண்டும்படி கெஞ்சினார். பாபா தன்னால் ஒன்றுமே செய்ய முடியாது என்று கூறிவிட்டார். பாபாவினுடைய ஒரு சிஷ்யர், ''ஒரு சமாதானத்திற்காவது, 'எல்லாம் சரியாகிவிடும்' என்று நீங்கள் கூறியிருக்கலாம் பாபா'' என்று கூறினார்.

அதற்கு பாபா, ''முட்டாள்! நான் விளையாட்டாகச் சொன்னால் கூட அவன் உயிர்பிழைத்து விடுவான். ஆனால், அதனால் என்ன பயன்? உயிர் பிழைத்தாலும் அவன் இந்த மாயை எனும் சாக்கடையில்தான் உழல்வான். நான் எல்லோரையும் இந்த சாக்கடையிலிருந்து வெளியேற்றவே வந்துள்ளேன். அவர்களை அதிலே மக்க விடுவதற்கல்ல'' என கூறினார்! இப்படி சம்சாரிகளை கரையேற்றி, நாமசங்கீர்த்தனத்தையே கரையேறுவதற்கு மார்க்கமாக காட்டிய ஒரு பெரிய மஹான் ஆவார் சித்த நித்யானந்ததாஸ் பாபாஜி!

---

எல்லாவற்றையும் துறந்த ஞானிகளைக் கொண்டும்கூட தாம் சம்பாதிப்பதற்கும், தன்னை விளம்பரப்படுத்திக் கொள்வதற்கும், புகழ் தேடிக்கொள்வதற்கும் பார்க்கும் உலகத்தின் மாயை அவ்வளவு பொல்லாதது.

**– ஸ்ரீ ஸ்வாமிஜி**

---

❖ ஸ்ரீ ஸ்வாமிஜிக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயங்களை
Personal Secretary to
**H.H. SRI SRI MURALIDHARA SWAMIJI**
New No. 51, Old No. 24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83 Telephone : 044-24895875, email ID : contact@madhuramurali.org
என்னும் முகவரிக்கு அனுப்பவும்.

# ஸ்ரீ ஸ்வாமிஜியின் ஸம்பாஷணைகளிலிருந்து - 136

*நின்னெரி எரித்தெனை நீறாக்கிடுமுன்*
*நின்னருண் மழை பொழி அருணாசலா*

வேதாந்த விசாரம் பழகுவோரும் ஏதோ ஒரு ஆசனத்தை நன்கு அப்யஸித்து அதில் சித்தி பெறுதல் அனுகூலமாக இருக்கும். கடலில் முத்துக்குளிப்பவன் எங்ஙனம், மூச்சை அடக்கி, கடலுக்குள் முத்தைத் தேடி கண்டுபிடிக்கிறானோ, அதுபோலவே ஆத்மவிசாரம் பழகுவோர் ஒரு ஆசனத்தில் அமர்ந்து, பிராணனை மெலிதாக பந்தப்படுத்தி, பார்வையை உட்புறமாக திருப்பி, எண்ணங்கள் உற்பத்தி ஆகும் இடத்தை கவனிக்க வேண்டும்.

''நிமிர்ந்து உட்காருகிறேன்'' என்று முடிவு செய்து விறைப்பாக உட்கார்ந்துகொள்ளக் கூடாது. அமருதல் என்பது லலிதமாகவும், இயல்பாகவும் இருக்க வேண்டும். எந்தவொரு சாதனைக்கும் லலிதமாக செய்வதும், சிரமமின்றி செய்வதும் மிகவும் முக்கியம். ஆத்மவிசாரத்திற்கும் இது பொருந்தும்.

கண்ணை மூட வேண்டும் என்பதற்காக, கண்களை இறுக்க மூடுதல் கூடாது. எதிரே உள்ள பொருள் கண்ணில் தெரியாத அளவு சரியாக மூடினால் போதுமானது. அதேபோல், பிராணனை பந்தப் படுத்துவது என்பது ஆத்ம விசாரத்திற்கு அனுகூலமே தவிர, அதுவே பிரதானம் அல்ல. பிராணனை பலவந்தமாக பந்தப்படுத்துவதற்கும், தானாக விசாரத்தினால் பந்தப்படுத்துவதற்கும் வித்யாசம் உண்டு. முந்தையது அதிகம் பழகினால் சரீரம் ரோக வசப்படும்.

பார்வையை உண்முகமாக திருப்பி பழகவேண்டும். இது சிறிது, சிறிதாக பழகி வரவேண்டும். ஒரே நாளில் இது கூடுவது இல்லை. பார்வை உண்முகப்படவில்லை எனில் ஆத்மசாக்ஷாத்காரம் கிட்டாது. இப்படி பார்வையை உண்முகப்படுத்தி, பிராணனை இலேசாக பந்தப்படுத்தி, எண்ணங்கள் எங்கிருந்து உற்பத்தி ஆகின்றன என்பதை கவனிக்க வேண்டும். எண்ணமானது, ''புருவ மத்தியில் இருந்து கிளம்புகிறது, ஸஹஸ்ராரத்தில் இருந்து

கிளம்புகிறது நாபியில் இருந்து கிளம்புகிறது, ஹ்ருதயத்தில் இருந்து கிளம்புகிறது'' என்று எந்த கற்பனையோ, **பா**வனையோ கூடாது. இது மிகவும் தவறு. நாமாக எண்ணம் எங்கிருந்து கிளம்புகிறது என்று கண்டுபிடிக்க வேண்டும்.

ஏற்கனவே மந்திர ஜபம், நாமகீர்த்தனம், மூர்த்தி தியானம், ராஜ யோகம் போன்ற சாதனைகள் பழகி அதில் சித்தி பெற்றோருக்கு இது எளிதில் விளங்கும். மற்றவருக்கு இது புரிவதும் கடினம், அப்யசிப்பதும் கடினம். தவறாக ஏதோ ஓர் இடத்திலிருந்து எண்ணம் கிளம்புகிறது என கற்பனை செய்வது எந்தவொரு நன்மையும் தராது.

ஒரு தின்பண்டத்தை எறும்புகள் மொய்க்கின்றன. இவை எங்கிருந்து வருகின்றன என்று கண்டுபிடிக்க வேண்டின், எறும்பு கூட்டம் ஒரு வரிசை போட்டு செல்லும். அதை பின்தொடர்வோமெனில் எறும்பு புற்றைக் கண்டுபிடித்து, அதை அழிக்க முடியும்.

அதுபோல், எண்ணம் எங்கிருந்து கிளம்புகிறது என்பதை கண்டுபிடிக்க வேண்டும் எனில், எண்ணங்களை கவனித்து வரவேண்டும். எண்ணங்களை பின்தொடர்ந்து, அதில் பிரவர்த்திக்காமல் எண்ணம் எதனால் வந்தது போன்ற விசாரங்களில் ஈடுபடக் கூடாது. மேலும், அந்த எண்ணம் எந்த வஸ்துவை பற்றியதோ அதை பற்றிய விசாரமும் கூடாது.

எண்ணங்களை நன்கு கவனித்து பழகிய பின், இந்த எண்ணம் யாருக்கு வருகிறது என விசாரிக்க வேண்டும். இப்படி விசாரிக்கையில் எண்ணம் எனக்கு வருகிறது என தோன்றும்.

எண்ணத்தை விசாரிப்பது என்பது மனதினால் ஒரு பாஷையில் கேட்ககூடிய கேள்வி அல்ல. இது தமிழிலோ, ஆங்கிலத்திலோ, வடமொழியிலோ கேட்க வேண்டிய செயல் அல்ல. ஆக, எண்ணம் யாருக்கு வருகிறது என்று விசாரிப்பதை தவறாக புரிந்துகொண்டு அப்யஸித்தால், மனக்குழப்பம்தான் மிஞ்சும்.

ஒரு தகுந்த ஆத்மஞானியை அண்டி, அவரிடம் நேரிடையாக இது குறித்த சந்தேகங்களை கேட்டு தெளிவு பெற்றுக் கொள்ள வேண்டும். நூல்கள் வாயிலான தகவல்கள் முழுமையான தெளிவை

தராது.

எண்ணங்கள் யாருக்கு வருகின்றன என விசாரிக்கையில், ''எண்ணம் எனக்கு வருகிறது, நான்தான் நினைக்கிறேன்'' என்று தோன்றும்.

எண்ணம் எனக்குதான் வருகிறது என்று தோன்றும் காலத்தில், எண்ணங்கள் உற்பத்தி ஆகும் இடத்தை தொடர்ந்து கவனித்து வர வர, ஒவ்வொரு எண்ணமும் உற்பத்தி ஸ்தானத்திலேயே ஒடுங்க ஆரம்பிக்கும். இது பலகாலம் அப்யஸிப்பதனால் மட்டுமே அனுபவத்துக்கு வரும்.

மேலும், இப்படி அனுபவம் ஆகும்பொழுது, எண்ணங்களின் உற்பத்தி ஸ்தானமானது ஹ்ருதயமே என்றும், அது இரு மார்புகளுக்கு இடையே, வலது மார்பின் புறம் இரு விரல்கட்டை தள்ளி, சற்று கீழே இருப்பதும் தெரியும்.

ஆரம்ப காலங்களில், உற்பத்தி ஸ்தானத்தில் இருந்து பல எண்ணங்கள் வந்துகொண்டே இருக்கும். இப்படி ஏற்படுவதினால், ஆத்ம விசாரமோ, தியானமோ சித்திக்கவில்லை என்று நினைக்க தேவையில்லை. மாறாக, ஆத்மவிசாரம் நன்கு சித்தித்து உள்ளது என்பதற்கு இது ஒரு சான்று.

இந்திரியங்களின் சுபாவம் என்பது உலகை நோக்கி செல்வது மேலும் அவை அடங்கியே இராது. ஆக, ஏதோ ஒன்றை நாம் செய்யக்கூடாது என்று முடிவு எடுத்தால், அதிலேயே மனம் தீவிரமாக இழுத்து செல்லும். உதாரணமாக இன்று ஏகாதசி விரதமிருக்க வேண்டும் என்று முடிவெடுத்தால் அதிகம் பசிக்கும். சாதாரண நாட்களில் உணவில்லாமலேயே (இப்படி ஒரு முடிவு எடுக்காத பட்சத்தில்) கூட இருந்து விட முடியும். சாப்பிடக் கூடாது என முடிவெடுத்தால் எப்படி அதிகம் பசிக்கிறதோ, அதுபோல் எண்ணங்கள் கிளம்புவதை அடக்க வேண்டும் என்று சூக்ஷ்மமாக ஒரு உணர்வு இருப்பதால், மனதில் அதிக எண்ணங்கள் வேகமாக தோன்றுகின்றன. இது மனதின் சுபாவம். இதைப் பற்றி கவலைக் கொள்ள தேவையில்லை.

(தொடரும்)

# செய்திகள்

### ஏப்ரல் 15-ஆம் தேதி முதல் ஜுன் 1-ஆம் தேதி வரை

ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜியின் அருளாசியுடன் சென்ற 3 ஆண்டுகளாக நடைபெற்றதைப் போலவே இந்த ஆண்டும் தொடர்ந்து 48 நாட்கள் **''யோகி ராம்சுரத்குமார் யோகி ராம்சுரத்குமார் யோகி ராம்சுரத்குமார் ஜெய குருராயா''** அகண்ட நாமகீர்த்தனம் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை சென்னையில் பல இடங்களில் ஏற்பாடு செய்யப்பட்டு நடைபெற்றது. இதற்கான ஏற்பாடுகளை திரு. S. கபீர்தாஸ் செவ்வனே செய்திருந்தார்.

### மே 17-ஆம் தேதி முதல் ஜுன் 15-ஆம் தேதி வரை

'பக்தபுரி' என்று பக்தர்களால் ப்ரேமையுடன் அழைக்கப்படும் பரனூரில், ஸ்ரீ ராதிகாரமண பக்தகோலாஹலன் ஸன்னதியில் ஸ்ரீ ஸ்ரீ அண்ணா அவர்களின் திவ்ய ப்ரேரணையை ஒட்டி, புருஷோத்தம மாதத்தில், 17-5-2007 முதல் 15-06-2007 வரை ஸத்ஸங்க அன்பர்களும் நமது ஸ்வாமிகளும் கலந்துகொள்ள, அகண்ட மஹாமந்திர கீர்த்தனம் நடைபெற்றது.

### மே 31-ஆம் தேதி

மங்களூரில் எழுந்தருளியுள்ள, ''ஸ்ரீ ராதா ருக்மிணி சமேத வரதராஜ பெருமாள்'' சந்நிதியில் ஆரம்பித்து பிரதான வீதி வழியாக மாலை 6 மணி முதல் 7-30 மணி வரை ''ஹரே ராம...'' மஹாமந்திர நகரசங்கீர்த்தனம் ஊர் பக்தர்கள் கலந்துகொள்ள வெகு சிறப்பாக நடைப்பெற்றது. அனைவருக்கும் பிரசாதம் விநியோகிக்கப்பட்டு இனிதே நிறைவேறியது.





இந்நிகழ்ச்சியில் மங்களூர், மலையனூர், M. புதூர், எலக்கூர், எழுத்தூர், வெங்கனூர், V. களத்தூர், விநாயகநந்தல் மற்றும் சிறுபாக்கம் ஆகிய ஊர்களை சேர்ந்த நமது சத்சங்கத்து அன்பர்கள், கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

ஜூன் 2-ஆம் தேதி அன்று மங்களூரை அடுத்துள்ள விநாயகநந்தலில் விநாயகப் பெருமாள் சந்நிதியில் ஆரம்பித்து பிரதான வீதிகள் வழியாக மாலை 6 மணி முதல் 8 மணி வரை மஹாமந்திர நகர சங்கீர்த்தனம் இனிதே நடைப்பெற்றது.

மங்களூரைச் சேர்ந்த நமது சத்சங்கத்து அன்பர்களும் விநாயநந்தலை சேர்ந்த திரளான பக்தர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். விநாயகநந்தலை சேர்ந்த அன்பர் திரு. வெங்கடேசன், திருமதி. மகாலட்சுமி வெங்கடேசன் தம்பதியினர், மகேஸ்வரன் மற்றும் நவீன் நகர சங்கீர்த்தனம் நடைபெற வேண்டிய அனைத்து ஏற்பாடுகளையும் சிறப்பாக செய்து கொடுத்தார்கள். அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது.

### ஜூன் 3-ஆம் தேதி - ஸ்ரீ சுந்தர ஹனுமான் பிரதிஷ்டாபனம்

காலை 9.30 மணியிலிருந்து 10.30 மணியளவில் மூல நட்சத்திரம் கூடிய சுபயோக சுபதினத்தில் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் முன்னிலையில் நூதன ஸ்ரீ சுந்தர ஹனுமான், பெங்களூர் ராமமூர்த்தி நகர், N.R.I. லே அவுட், கல்கரேயில் உள்ள வேதவ்யாஸ புராண பாடசாலை வளாகத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

அன்று காலை ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் திருக்கரங்களால் முதலில் சக்கரப் பிரதிஷ்டை செய்யப்பட்டது. பிறகு ஸ்ரீ ஸ்வாமிஜி அருளுரை வழங்கினார்கள். இந்த மஹோத்ஸவத்தில் பக்தர்கள் கலந்துகொண்டனர்.

ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள், ஸ்ரீ சுந்தர ஹனுமான் ''ஸ்தல புராணம்'', ''வேத வியாச புராண பாடசாலை'' பற்றியும் ''ஹரே ராம'' நாம மஹாமந்திரத்தின் மகிமைப்பற்றியும் ''ஸ்ரீ சுந்தர ஹனுமான்'' திருக்கோவில் கட்டுவதற்கான விசேஷ காரணங்களையும் கூறினார்கள். ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் அருளுரை வழங்கும்பொழுது,

கோவில் வளாகத்தில், 40 டன் Capacity கிரேன் மூலம் 12 அடி உயரமும், 3500 கிலோ கனமும் கொண்ட ஸ்ரீ சுந்தர ஹனுமான், சுமார் 200 அடி உயரத்திற்கு தூக்கப்பட்டு பீடத்தில் வந்து அமர்ந்த காட்சியை கண்ணுற்றோருக்கு சாட்சாத் ஹனுமாரே தேவ லோகத்திலிருந்து ஆகாச மார்க்கமாக வந்து பீடத்தில் அமர்ந்தாற் போல் இருந்தது. இக்காட்சி அங்கு குழுமியிருந்த பக்தர்கள் அனைவரையும் மெய் சிலிர்க்க வைத்தது. ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் ஸ்ரீ சுந்தர ஹனுமாருக்கு, எண்ணை காப்பு சாத்தினார்கள். பிறகு ஹனுமாருக்கு பலவித வண்ண மலர்களால் அலங்காரம் செய்து, 7 வித நெய்வேத்தியம் செய்து, தன் திருக்கரங்களால் தூப தீப ஆராதனை செய்தார்கள். அனைவருக்கும் தீர்த்தம் வழங்கி மந்திராட்சதையும் கொடுத்து அருளினார்கள்.

வந்திருந்த அனைவருக்கும் பிரசாதம் வினியோகம் செய்யப்பட்டது. இதற்கான ஏற்பாடுகளை நமது ஸத்சங்கத்தைச் சேர்ந்த பெங்களூர் திரு. A. சங்கர நாராயணன் மற்றும் பெங்களூர் பக்தர்கள் மிகவும் சிறப்பாக செய்திருந்தனர்.

### ஜூன் 17-ஆம் தேதியன்று



ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி அருளாசியுடன் ஆம்பூர் ஆன்மீக பேரவை சார்பில் ஆம்பூர் ஸ்ரீ சீனிவாச பெருமாளுக்கு 108 குடம் பால் அபிஷேகம் முதன்முதலாக நடைபெற்றது. ஆம்பூர் ஸ்ரீ நாகநாத சுவாமி ஆலயத்தி லிருந்து 108 பால் குடம் ஊர்வலம், ஆம்பூர் மாதர் வழிபாட்டு சங்கம், தேவார திருச்சபை, சோமவார வழிபாட்டு சங்கம், ஸ்ரீ ராம கிருஷ்ணர் பணி மன்றம், ஸ்ரீ சத்யசாய் சேவா சமிதி, ஆன்மீகப் பேரவை மற்றும் அனைத்து இறைநேயர்கள் ‘‘மஹா மந்திரம்’’ முழங்க ஆன்மீக ஊர்வலம் நடைபெற்றது. தொடர்ந்து ஸ்ரீ ராமனுஜருக்கு பன்னீர் அபிஷேகம் நடைபெற்றது.

காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை மஹாமந்திர வழிபாடு தொடர்ந்து நடைப்பெற்றது. மாலை 4.15 மணி முதல் 6 மணி வரை சென்னை திருமதி. கிருத்திகா பரத்வாஜ் குழுவினரின் சங்கீத உபன்யாசம் நடைப்பெற்றது. அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது. நகர சங்கீர்த்தன வீதி உலாவும் நடைப்பெற்றது. இதில் ஆம்பூர் பெருமக்கள் நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

ஆம்பூர் ஆன்மீக பேரவையைச் சேர்ந்த எம். மோகன்குமார், வி. குமரேசன் மற்றும் பேரவையினர் நிகழ்ச்சி ஏற்பாடுகளை செய்து இருந்தனர்.

**ஜூன் 18-ஆம் தேதி**

தஞ்சாவூர் மேலவெளி ஸ்ரீ ஸ்ரீ சீரடி சாயிபாபா அறக்கட்டளை சார்பில், ஸ்ரீ ஸ்ரீ சீரடி சாயிபாபா திருக்கோயில் முதல் வருட அபிஷேகத்தை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்ச்சிகளில் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் கலந்துகொண்டு இரவு 7 மணி முதல் 9 மணி வரை அருளுரை வழங்கினார்கள்.

**ஜூன் 23-ஆம் தேதி**

சென்னை, குரோம்பேட்டை, குமரன் குன்றம், விவேகானந்தா கல்விக் கழகத்தின் சார்பில் இயங்கும் ஸ்ரீமதி இராம்குமார் தேவி போம்ரா விவேகானந்த வித்யாலயா பள்ளி வளாகத்தில் மாலை 6 மணி முதல் இரவு 8 மணி வரை நடைபெற்ற மஹாமந்திர நாமகீர்த்தன கூட்டுப் பிரார்த்தனை ஸ்ரீ ஸ்வாமிஜி முன்னிலையில் நடைபெற்றது. மூவாயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்ட இந்த வைபவத்தில் சுமார் 1500 பள்ளி மாணவ மாணவியர் கலந்து கொண்டு, ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களுடன் ''மஹாமந்திர கீர்த்தனம்'' செய்தனர். இந்த நாமகீர்த்தன வைபவத்திற்கு, விவேகானந்த வித்யாலயா ஆசிரியர்கள் மற்றும் பள்ளி வளர்ச்சிக்குழு மிகவும் சிறப்பாக ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.

**ஜூன் 24-ஆம் தேதி**

பெரியகுளம், தேவதானப்பட்டி, இந்து நடுநிலைப் பள்ளியில் அகண்ட ''ஹரே ராம'' நாமகீர்த்தனம் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை நடைபெற்றது. இதில் 250க்கும் அதிகமான பள்ளிக் குழந்தைகள், ஆசிரியர்கள் கலந்துகொண்டனர்.

இதற்கான ஏற்பாடுகளை பெரியகுளம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதரஸ்வாமிஜி நாமஸங்கீர்த்தன பேரவையைச் சேர்ந்த திரு. இரா. ஹரே ராம க்ருஷ்ணகுமார் மற்றும் பள்ளி தலைமையாசிரியர் செவ்வனே செய்திருந்தனர்.

**ஜூன் 30-ஆம் தேதி**

உலக மக்கள் அமைதி வேண்டியும், அனைவரும் அனைத்து நன்மைகள் பெற்றிட வேண்டியும், வாலாஜாபேட்டை காந்தி பூங்காவில் நாமகீர்த்தன கூட்டுப்பிரார்த்தனை ஏற்பாடு செய்யப்பட்டது.

அணைக்கட்டு ரோட்டில் உள்ள சுந்தர விநாயகர் கோயிலிருந்து ஸ்ரீ ஸ்வாமிஜி முன்னிலையில் பஜனை குழுவினர் பாகவத குழுவினரின், ''ஹரே ராம...'' நகர்வல நாமகீர்த்தனம் பஜார் வீதி, எம்பிடி சாலை, பஸ் நிலையம், ட்ரங்க் ரோடு வழியாக சென்றது.

வழி நெடுகிலும், புஷ்ப வியாபாரிகள் சங்கம் மற்றும் பல்வேறு தரப்பு மக்கள் ஸ்ரீ ஸ்வாமிஜியை வரவேற்றனர்.

பிறகு, காந்தி பூங்காவில், ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் நாம மஹிமைப் பற்றி அருளுரையாற்றினார்கள். பின்னர் ஸ்ரீ ஸ்வாமிஜியுடன் ''ஹரே ராம...'' மஹா மந்திரத்தை நாமகீர்த்தனம் செய்து பக்தர்கள் சுமார் நான்காயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். இதில் வாலாஜாபேட்டை மற்றும் சுற்றுப்புற ஊர்களிலிருந்து பக்தர்கள் வந்து பிரார்த்தனை செய்தனர். அனைவருக்கும் அருட்பிரசாதம் வழங்கப்பட்டது.

நிகழ்ச்சி ஏற்பாடுகளை நமது சத்சங்கத்தைச் சேர்ந்த திரு. பழனி, திரு. மோகன், ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி தெய்வீக பேரவையினர் மற்றும் வாலாஜாபேட்டை பக்தர்கள் சிறப்பாக

செய்திருந்தனர்.

**தூத்துக்குடி செய்திகள்**

**ஜூன் மாதம்**

நாம முத்துநகரில் ''மஹாமந்திர'' நாமகீர்த்தனம் சிறப்பாக நடைபெற்றுக் கொணடு வருகின்றது.

நகர்வல நாமகீர்த்தனம் 15-5-07 அன்றும் மஹாமந்திர நாம கீர்த்தனம் பெருமாள் கோயிலில் மே 17, 21, 24, 28, 31 ஜூன் 4, 7, 11, 14 தேதிகளில் நடைபெற்றது.

ஜூன் 26-ஆம் தேதியன்று அகண்ட நாமகீர்த்தனம் திருமதி. கோமதி அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது. பார்வதி அம்மன் திருக்கோயிலில் மஹாமந்திர கீர்த்தனமும் சச்சிதானந்த சபையில் கூட்டுப் பிரார்த்தனை நடைபெற்றுக் கொண்டு வருகின்றது.

தென்மாவட்ட ஒருங்கிணைப்பாளர் தூத்துக்குடி திரு. கதிரேசன் அவர்களும் தூத்துக்குடி ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி கேந்திரவினரும் ஏற்பாடுகளை செய்து வருகின்றனர்.

**ஜூன் 29-ஆம் தேதி**

காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை அகண்ட ''ஹரே ராம...'' நாமகீர்த்தனம் சென்னை, கொடுங்கையூர், சீதாராமர் நகர் திரு. சண்முகம் அவர்கள் இல்லத்தில் மிகவும் விமர்சையாக நடைபெற்றது.

மாலை ஸ்ரீ ஸ்வாமிஜியின் திவ்ய திருவுருவ படத்துடன் ''ஹரே ராம'' வீதி பஜனையுடன் அருள்மிகு வரசித்தி விநாயகர் ஆலயத்திற்கு சென்று அங்கும் நாம கீர்த்தனம் நடைபெற்றது. நூற்றுக்கணக்கானோர் இந்த நாமகீர்த்தன வைபவத்தில் கலந்து கொண்டனர்..

கொடுங்கையூரில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் மாலையில் அருள்மிகு வரசித்தி விநாயகர் ஆலயத்திலும் திரு. சண்முகம் அவர்கள் இல்லத்தில் ஒவ்வொரு சனிக்கிழமையும் திருமதி ப்ருந்தா கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இல்லத்தில் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமைகளிலும் நாமகீர்த்தனம் நடைபெற்றுக் கொண்டு வருகின்றது.

## புதிய வெளியீடுகள்

**நூல்கள் :**

1. ஸனாதனப் புதிர்
2. கலிதர்ம உந்தியார்

**H.H. Sri Sri Muralidhara Swamiji's discourse series in Tamil :**
**Cassettes, Audio CDs, VCDs**

| | | |
|---|---|---|
| 1. | ஸ்ரீ க்ருஷ்ண லீலா | Audio CD |
| 2. | கலிகால உசிதம் தர்மம் - 2007 புத்தாண்டில் ஸ்ரீ ஸ்வாமிஜியின் அருளுரை (தமிழில்) | Cassette, Audio CD |
| 3. | மஹாமந்திர கூட்டுப்பிரார்த்தனை-2007 (தமிழில்) | VCD |
| 4. | MahaMantra Mass Prayer - 2007 (Clippings of H.H. Sri Sri Swamiji's talk in Tamil with captions in English) | VCD |

**கீர்த்தனங்கள் :**

| | | |
|---|---|---|
| 1. | ஸ்ரீ ஸ்வாமிஜி அருளிய **'கலிதர்ம உந்தியார்'** | Cassette, Audio CD |
| 2. | **மஹாமந்திர கீர்த்தனம்** -ஸ்ரீ ஸ்வாமிஜியின் மதுரமான குரலில் | Cassette, Audio CD |
| 3. | **பஞ்ச கீதங்கள்** | Cassette, Audio CD |

| | |
|---|---|
| H.H. Sri Sri Muralidhara Swamiji's 'Kali Dharma Undhiyar' (Lecture in English) by Dr. A. Bhagyanathan (Live Recording) | MP3, Audio CD |

***Contact :***

Phone : 044-24895875

For queries regarding, Madhuramurali, Books, Audio tapes & CDs kindly send e-mail to "publications@madhuramurali.org"

**உங்கள் கவனத்திற்கு...**

- ஒவ்வொரு வியாழக்கிழமைகளில், இரவு 10.10 மணிக்கு சென்னைத் தொலைக்காட்சி-பொதிகையில் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் **'ஆத்ம தரிசனம்'** ஒளிப்பரப்பு ஆகும்.
- 'சக்தி விகடன்' ஆன்மீக இதழில், ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் **'தினம் தினம் திருநாளே!'** என்ற ஆன்மீக தொடர் வெளிவருகிறது.

## ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் நிகழ்ச்சி நிரல்

| தேதி/நேரம் | நிகழ்ச்சி/இடம் | தொடர்புக்கு |
|---|---|---|
| 04.07.07 - 6.30 - 8.30 p.m. | சுவாமி சித்பவானந்தர் சேவா சங்கம் சார்பில் அருளுரை, இடம் : கொங்கு கலையரங்கம் சம்பத் நகர், ஈரோடு | திரு. R. மோகன்குமார் 93600 90730 |
| 09.07.07 - 6.30 - 8.30 p.m. | அருளுரை இடம் : தேரடி மைதானம் குடியாத்தம் | திரு. மாணிக்கம் 98417 25839 |
| 10.07.07 காலை | ஏகாதசி, இடம் : மதுரபுரி ஆஸ்ரமம் | |
| 15.07.07 - 11.00 a.m. | 'Friends of Tribals Society' கோவை கிளை துவக்க விழா இடம் : Rajasthani Sangh, R.S. புரம், கோயம்புத்தூர் | திரு. கிருஷ்ணன் 0422-2235139 |
| 15.07.07 6.30-8.30 p.m. | அருளுரை இடம் : அய்யப்பா பூஜா சங்கம், ராம் நகர் கோவை | திரு. கிருஷ்ணன் 0422-2235139 |
| 26.07.07 காலை | ஏகாதசி இடம் : மதுரபுரி ஆஸ்ரமம் | |
| 05.08.07 | 'வைதிக ஸ்ரீ' ஆண்டு விழா அயோத்யா மண்டபம், சென்னை-33 | வைதிக ஸ்ரீ 044-24361210 |

- Sri Sri Muralidhara Swamiji's lecture series in English telecast on Sanskar TV :

  For Local viewers Every Friday & Saturday at 9.00 pm IST starting June 8th 2007.

  International feeds available at 8.00 a.m. IST on every Saturday and Sunday.

  On Internet watch the programs online at: http://www.sanskartv.info/live.htm
- Live Webcast **Sri Sri Swamiji's lecture** July 21/22/29, Aug 10 for details visit www.namadwaar.org